**காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2017–18ம் நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை**

௳௳௳

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.615 / க்யூ 1 / 2017 நாள்.20.10.2017 ன்படி, காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.111 / 2017 ன்படி, காஞ்சிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 20.10.2017 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம். | 1 | மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம். |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம். | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம். |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, காஞ்சிபுரம். | 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, காஞ்சிபுரம். |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம். | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம். |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், காஞ்சிபுரம். | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், காஞ்சிபுரம். |
| 6 | முதன்மை கல்வி அலுவலர், காஞ்சிபுரம். | 6 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, காஞ்சிபுரம். |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர், காஞ்சிபுரம். | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், காஞ்சிபுரம். |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர், காஞ்சிபுரம். | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருப்பெரும்புதூர் @ ஒரகடம். |
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), காஞ்சிபுரம். | 9 | மாவட்ட வன அலுவலர், காஞ்சிபுரம். |

Scanned with OKEN Scanner

| | | | |
|---|---|---|---|
| 10 | திரு. ரா. ஜெயராமன்,<br>த/பெ. அ. ராமஜெயம்,<br>செயலாளர்,<br>காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் குவாரி ஒப்பந்ததாரர்களின் நலவாழ்வு சங்கம்,<br>எண்.1, முல்லை நகர் பிராதான தெரு,<br>மேற்கு தாம்பரம் 600 045. | 10 | முதன்மை மண்டல பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை,<br>சேப்பாக்கம்,<br>சென்னை 5 |
| | | 11 | உதவி இயக்குநர்,<br>நில அளவைப் பதிவேடுகள் துறை,<br>காஞ்சிபுரம். |
| | | 12 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| | | 13 | மாவட்ட சமூக அலுவலக அலுவலர்,<br>காஞ்சிபுரம் |
| | | 14 | துணை இயக்குநர்,<br>பொது சுகாதார மையப் பொறுப்பாளர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>காஞ்சிபுரம் |
| | | 15 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>காஞ்சிபுரம். |
| | | 16 | வருவாய் கோட்ட அலுவலர்,<br>மதுராந்தகம். |

காஞ்சிபுரம் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, காஞ்சிபுரம் வங்கிக் கிளையில் வங்கி வணக்கு (கணக்கு எண்.6581717556) துவக்கப்பட்டு, சிறுவகை கனிமங்கள் குவாரி செய்ய அரசுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்காக நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12.01.2015–க்கு முன்னர் 51 சாதாரண கற்குவாரிக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக்கட்டணத்தில் 30 சதவிகித தொகையை கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்திட சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் டெண்டர் மற்றும் பொது ஏலத்தின் மூலம் எந்த குவாரியும் இல்லை. மேலும், 12.01.2015–க்கு பின்னர் சிறுவகை

கனிமங்களாக கிராவல் மற்றும் சவுடு மண் ஆகியவற்றை ஊராட்சி ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகளிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும் இனங்களுக்காக செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 10 சதவிகித தொகை கனிம அறக்கட்டணை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தற்போது 78 கிராம ஊராட்சிகள் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக **31.03.2018** வரை **ரூ.1,87,25,189** (ரூபாய் ஒரு கோடியே என்பத்தேழு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூற்று என்பத்து ஒன்பது மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(அ/ஙா)

தலைவர், 29/6/18
காஞ்சிபுரம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம்.

29-06-18.

D / 2018 / DMF ANNUAL REPORT / C2

Scanned with OKEN Scanner